திரு. ம. சங்கரலிங்கம் : நம்முடைய பாதுகாப்புத் துறையோடு தொடர்பு கொண்டு, இதற்குத் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய வழி வகுக்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பாதுகாப்புப் படையின ருடைய உதவியின் அடிப்படையிலேதான் இந்தப் பணிகளை நாம் நிறைவேற்ற வேண்டும். அயல்நாட்டுக் கப்பல்கள் ஊடுருவுவதைத் தடுக்க கப்பற்படை யினால்தான் முடியும். எனவே இது குறித்து கிழை மண்டலக் கடலோரக் கப்பற்படைக் கமேண்டருக்கு எழுதியிருக்கிறோம். அதைப்பற்றி அவர்கள் பரிசீலிக்கிறார்கள்.

திரு. சி. இராமலிங்கம் : கேரளாவிலே பிஷரீஸ் கார்ப்பரேஷன் அமைந்து, அதன் மூலமாகப் படகுகளை வாங்கி மீனவர்களுக்கு அளிக்கிறார்கள். அது போன்று தமிழகத்தில் இருக்கிறதா? அப்படி இருந்தால் எத்தனை விசைப் படகுகளை வாங்கி மீனவர்களுக்கு அளித்திருக்கிறார்கள்? எங்கெங்கு மீன் பிடிக்கிறார்கள்?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மூலக் கேள்வி பாதுகாப்புப் படை பற்றியது. மீன், படகு என்று சொல்லும்போது அது சம்பந்தமாக எல்லாவற்றையும் கேட்டால் பதில் சொல்ல முடியாது. தனிக் கேள்வி கேட் டால், விவரங்கள் அளிக்க முடியும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மீன் பிடிக்க வந்தார்களோ, ஆள் பிடிக்க வந்தார்களோ என்ற சந்தேகம் வந்தாலும், யுவான்சுவாங், பாஹியான் போன்ற அறிஞர்கள் யாராவது அந்தக் கப்பல்களில் வந்தார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அறிஞர்கள் வந்தால் நமக்குச் சொல்லிவிட்டுத்தான் வருவார்கள். அவர்கள் மீன்பிடி படகுகளை வைத்துக்கொண்டு ஒருகாலும் வரமாட்டார்கள்.

Converts to Christianity.

* 128. *Q.*—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Finance be pleased to state:

(*a*) whether any representations have been received from Christian Organisations, requesting that educational and other concessions now being given only to the members of the backward

classes who profess the Hindu religion, should be extended to the members of the same classes who profess Christian religion also ; and

(*b*) if so, the action taken thereon ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) பின்தங்கிய வகுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் சலுகைகளை மதம் மாறிய கிருத்துவர்களுக்கும் அளிக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் அடங்கிய மனுக்கள் தனிப்பட்ட நபர்களிடமிருந்தும் பல்வேறு கிருத்துவ சங்கங்களிடமிருந்தும் வந்துள்ளன.

(இ) பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் கண்டுள்ள சாதி/இனத்தவர்களின் கல்வி சமூக மற்றும் இதர நிலைகளை புள்ளி விவரங்களுடன் ஆய்ந்தும் பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென கோரியுள்ள சாதி/இனத்தவர்களின் கல்வி, சமூக மற்றும் இதர நிலைகளை புள்ளி விவரங்களுடன் ஆய்ந்தும் அரசுக்கு அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்குமாறு பிற்பட்டோர் நலத்துறை இயக்குநரை தனி அலுவலராகக் கொண்ட ஒரு குழுவை அரசு அமைத்துள்ளது. இக்குழு இதுகாறும் தனது பணியினைத் தொடங்கவில்லை. மேற்கண்ட மதம் மாறிய கிருத்துவர்களிடமிருந்து வந்த மனுக்கள் தனி அலுவலருக்கு அனுப்பப்பட்டுள்ளன. தனி அலுவலரின் அறிக்கை கிடைக்கப் பெற்றபின் இது குறித்து தக்கமுடிவு எடுக்கப்படும்.

திரு. பா. ரா. தாமஸ் : ஒருவர் கிருத்துவச் சமயத்திலிருந்து இந்து சமயத்திற்குத் திரும்பினால், அவர் அனைத்துச் சலுகைகளையும் பெறக்கூடிய வாய்ப்பு இன்று இருக்கிறது. இந்த அடிப்படையிலே இது ஒரு பாரபட்சமென்ற முறையிலே அணுகி, நம்முடைய அரசு இதில் நல்லதொரு பரிகாரம் காண முன்வருமா ?

(முற்பகல் 10-40)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஏற்கெனவே ஆய்வு நடத்திய வகையில் ஓரளவுக்குப் பிற்பட்டோர் பட்டியலில் அவர்களைச் சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கை எழுந்தபோது, அவர்களுடைய சமூகம் மற்றும் கல்வி நிலையைப்பற்றி கமிஷனர் ஆஃப் ஸ்டேடிஸ்டிக்ஸ் மற்றும் டைரக்டர் ஆஃப் எவாலுவேஷன் அன்ட் அப்ளைட் ரிசர்ச் உதவியுடன் ஆய்வு நடத்தி அறிக்கை தருமாறு கேட்கப்பட்டது. அப்படி மாற்ற வேண்டுமென்று பார்க்கும்போது, கிறிஸ்தவர்கள் என்று சொன்னால் மீனவ கிறிஸ்தவர்கள், ஆதி திராவிட கிறிஸ்தவர்கள், இந்து கிறிஸ்தவர்கள் என்ற மூன்று பிரிவினர் இருக்கிறார்கள் என்றும், ஆதி திராவிட கிறிஸ்தவர்களுக்கு ஆதி திராவிடர்களுக்குரிய

சலுகையை வழங்கலாம் என்றும், மீனவ கிறிஸ்தவர்களுக்கு பிற்பட்டோருக்குரிய சலுகையை வழங்கலாம் என்றும், இந்து கிறிஸ்தவர்களை மேற்கண்ட இரு பிரிவினரோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நல்ல நிலையில் இருக்கிறார்கள் என்றும் அறிக்கை தரப்பட்டது. மீனவர்களிலேயே ஆறு பிரிவினர்களாக இருப்பவர்களையும் பிற்பட்டவர்களாக ஆக்கலாம் என்று கருதி, அவர்களுக்கும் பிற்பட்டோருக்குரிய சலுகை அளிக்கப்பட்டு வருகிறது. பறவர், மூத்தவர், பர்வதராஜ குலத்தினர், பட்டணவர், செம்படவர் மற்றும் மீனவர் ஆகிய ஆறு வகுப்புகளைச் சேர்ந்தவர்களும் பிற்பட்டவர்களுடைய பட்டியலில் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு பிற்பட்டோருக்குரிய சலுகைகள் வழங்கப்படுகின்றன. இன்னும் வேறு சமூகங்களுக்கும் இதுபோல் சலுகை வழங்க வேண்டுமென்ற கோரிக்கை வந்திருக்கிறது. அவர்களுடைய சமூக நிலை, பொருளாதார நிலை இவைகளையெல்லாம் ஆராய வேண்டியிருக்கிறது. இது பற்றி இப்போது புள்ளிவிவரம் எடுக்க தனி அலுவலருக்குச் சொல்லியிருக்கிறோம். முழு விவரம் வந்த பிறகு, பிற்பட்டோர் நல இயக்குநர் அவர்கள் இவர்களுடைய கோரிக்கையை நீடு ஆராய்ந்து ஒரு அறிக்கை தரும்படி கேட்டிருக்கிறோம். அந்த அறிக்கை வந்த பிறகு அரசு இதுபற்றி ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கும்.

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியர்கள் நியமனம்.

* 129 வினா—**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியர் நியமனம் செய்துள்ள நேர்வுகளில் பணிமூப்புடையோர், பணிக்காலம் குறைந்தவர்களைவிட குறைவாக ஊதியம் பெறும் நிலை உருவாகியிருப்பதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், இந்நிலை, அரசு ஊழியர்களின் அடிப்படை விதி 22-பி-க்கு முரணானது என்பதை அரசு அறியுமா?

(உ) ஆம் எனில், இந்நிலையைத் தவிர்க்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(இ) & (உ) பணிமூப்பில் முதியவர்கள் தலைமை ஆசிரியராக பதவி வகிப்பதற்கு பதிலாக, பணிமூப்பில் இளையவர்கள் தலைமையாசிரியராக நியமனம் செய்யப்பட்டிருந்ததால், இவர்கள் ஆசிரியர்களாக பதவி இறக்கம் செய்யப்பட்டுள்ளனர். இந்த சூழ்நிலையில் பதவி இறக்கம் செய்யப்பட்டவர்களுக்கு ஊதிய இழப்பு இருக்கக்கூடாது என்ற அடிப்படை நோக்கத்தில்